# 1

# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## 11ம் ஆண்டு

## வியாபாரமும் துணைச்சேவைகளும்

Commerce and Business Studies Branch

### வியாபாரம்

(1) 1. பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு மற்றும் விற்பனை

1) வியாபாரமாகும் 2) துணைச் சேவைகளாகும்

3) வணிகமாகும். 4) தேவைகளாகும்

கீழே உள்ள தகவல்களைப் பயன்படுத்தி 2,3,4, வினாக்களுக்கு விடை தருக.

பானுக பெரேரா தேயிலை உற்பத்திகளை சந்தைப்படுத்துவதுடன் அவருடைய உற்பத்திகள் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளினால் பிரதானமாக கொள்வனவு செய்யப்படுகின்றது அத்துடன் அவரது உற்பத்திகள் உள்நாட்டில் உள்ள பல்பொருள் சிறப்பு அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

2. பானுகவினால் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தேயிலை உற்பத்திகள். விற்கப்படுவது அடையாளம் காணக்கூடியது,

1) இறக்குமதியாக. 2) ஏற்றுமதியாக.

3) உள்நாட்டு வியாபாரமாக. 4) மொத்த வியாபாரமாக.

3. தேயிலை தயாரிப்புகளை பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்வது,

1) இறக்குமதி வியாபாரமாகும். 2) வெளிநாட்டு வியாபாரமாகும்.

3) சில்லறை வியாபாரமாகும். 4) மொத்த வியாபாரமாகும்.

4. சுனிமல் என்ற பாடசாலை மாணவன் தனக்குத் தேவையான 03 பயிற்சிப் புத்தகங்கள், 02 பேனாக்கள் மற்றும் ஒரு பென்சில் சரசவி புத்தகக் கடையில் இருந்து கொள்வனவு செய்துள்ளார். இது,

1) சில்லறை வியாபாரமாகும் 2) மொத்த வியாபாரமாகும்.

3) இறக்குமதி வியாபாரமாகும். 4) ஏற்றுமதி வியாபாரமாகும்.

5. "எந்தவொரு வணிகத்தையும் வெற்றிகரமாக நடத்துவதற்கு பல்வேறு சேவைகளின் உதவி தேவை." இத்தகைய உதவி சேவைகள் பொதுவாக குறிப்பிடப்படுவது

1) பொருட்கள் மற்றும் சேவைகள்.
2) வங்கி சேவைகள்.
3) போக்குவரத்து சேவைகள்.
4) துணைச் சேவைகள்.

**(2)** பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடவும்.

1. இறுதி நுகர்வுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை சில்லறை வியாபாரமாகும். (.......)

2. மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் என்ப உள்நாட்டு வியாபாரத்தின் கூறுகள் ஆகும். (.......)

3. சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்கு இடையே உள்ள முக்கிய வேறுபாடு கொள்வனவு செய்யும் நோக்கமாகும். (.......)

4. சவூதி அரேபியாவில் இருந்து பெற்றோலியம் கொள்வனவு செய்வது ஏற்றுமதி வியாபாரமாகவும், இலங்கை தைத்த ஆடைகளை அமெரிக்காவிற்கு விற்பனை செய்வது இறக்குமதி வியாபாரமாகவும் கருதப்படும். (.......)

5. பல வகையான பொருட்கள் மொத்தமாக விற்பனை செய்யப்படுவது மொத்த வியாபாரமாகும். (.......)

6. பல்பொருள் அங்காடிகள் நிலையான பாரிய அளவிலான சில்லறை வியாபாரத்திற்கு உதாரணமாகும். (.......)

7. வியாபார கழிவுகள் பெரும்பாலும் சில்லறை வியாபாரத்தினால் வழங்கப்படுகின்றன. (.......)

8. இரு நாடுகளுக்கு அல்லது ஒரு சில நாடுகளுக்கு இடையிலான வியாபாரம் உள்நாட்டு வியாபாரமாகும். (.......)

**(3)** பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வணிகம் என்றால் என்ன?

2. சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்கு இடையே உள்ள மூன்று வேறுபாடுகளை தருக

3. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?

4. சில்லறை வியாபாரத்தின் மூன்று முக்கிய வகைகள் உள்ளன. 03 வகைகளை பெயரிட்டு ஒவ்வொரு உதாரணம் தருக.

Commerce and Business Studies Branch

## <u>வங்கி சேவைகள்</u>

1. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமத்தின் கீழ் இயங்குகின்ற வணிக வங்கிகள் .................... என அழைக்கப்படுகின்றன,

1) உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் 2) உரிமம் பெற்ற வணிக வங்கிகள்

3) சேமிப்பு வங்கிகள் 4) மக்கள் வங்கி

2. வணிக வங்கியில் மட்டுமே ஆரம்பிக்கக்கூடியதும் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட கூடியதும் ஆனால் வட்டி கிடைக்கப்பெறாததுமான கணக்கு.

1) சேமிப்பு கணக்குகள். 2) நிலையான வைப்பு கணக்குகள்.

3) நடைமுறை கணக்கு. 4) முதலீட்டுக் கணக்கு.

3. நடைமுறைக் கணக்கில் உள்ள மீதியை விட அதிகமாக தொகைக்கு காசோலைகளை வழங்குவதன் மூலம் நடைமுறை கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பணத்தின் அளவு குறிப்பிடுடப்படுவது.

1) வங்கிக் கணக்காக. 2) வங்கி கூற்றாக.

3) வங்கி மேலதிக பற்றாக. 4) வங்கி வைப்புத் தொகையாக.

4. நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர் குறிப்பிட்ட காலத்திற்கு வங்கியுடன் செய்த கொடுக்கல் வாங்கல்களை குறிப்பிட்டு வணிக வங்கியால் அனுப்பப்படும் அறிக்கை,

1) வங்கிக் கணக்கு. 2) வங்கி கூற்றாகும்.

3) வங்கி இணக்க கூற்றாகும் 4) வங்கி நடைமுறைக் கணக்கு.

**கீழே உள்ள தகவலின் அடிப்படையில் 5,6 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

சம்பத் வங்கியின் நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவரான **புபுது பெர்னாந்து** வினால், வியாபார கடன்கொடுனரான **சுமுது செனவிரத்னவிற்கு** ரூ 10000 பெறுமதியானதும் காசோலையின் பாதுகாப்பிற்காக காசோலையில் முகப்பில் இரண்டு சமாந்தர கோடுகளையும் இட்டு காசோலை அனுப்பப்பட்டது.

5. மேலே குறிப்பிடப்பட்ட காசோலையை செல்லுபடியாக காசோலையில் முகப்பில் கையொப்பத்தை இடும் அதிகாரம் கொண்டவர்.

1) சுமுது செனவிரத்ன. 2) புபுது பெர்ணாந்து.

3) சம்பத் வங்கி. 4) மேலே உள்ள அனைத்து தரப்பினரும்.

6. காசோலை பாதுகாப்பிற்காக புபுதுவினால் முகப்பில் இரண்டு சமாந்தர கோடுகளை வரைவது,

1) காசோலை அவமரியாதையாகும். 2) காசோலை குறுக்குகோடிடலாகும்.

3) காசோலைகளை ரத்து செய்வது. 4) காசோலைகளை நிராகரிப்பது.

Commerce and Business Studies Branch

7.வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பண பரிவர்த்தனைகளுக்காக பல்வேறு சேவைகளை வழங்குகின்றன. அது அழைக்கபடுவது.

1) கடனட்டை தொடர்பான சேவைகளாக. 2) இலத்திரனியல் பணம் தொடர்பான சேவைகளாக.

3) வைப்புத் தொடர்பான சேவையாக. 4) காசோலை தொடர்புடைய சேவைகளாக

**பின்வரும் கூற்றுகள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடவும்.**

8. சேமிப்புக் கணக்கின் வட்டியை விட நிலையான வைப்பு கணக்கின் வட்டி அதிகமாகும். (..............)

9. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட வட்டிவீதத்தின் கீழ் குறிப்பிட்ட தொகையை வைப்பு செய்வது நிலையான வைப்புகளாகும். (..............)

10. நிலையான வைப்புத்தொகையின் வட்டியை மாதந்தோறும் அல்லது முதிர்வின் போது அல்லது ஒப்புக்கொண்டபடி பெறலாம். (..............)

11. சேமிப்பு வைப்புகளை பிணையாக வைத்து, வைப்புத்தொகையில் குறிப்பிட்ட சதவீதத்தை கடனாகப் பெறலாம். (..............)

12. காசோலை மூலம் பரிவர்த்தனை செய்யக்கூடிய கணக்கு நடைமுறைக் கணக்கு. (..............)

13. நடைமுறைக் கணக்கு வைப்புகளுக்கு அதிக வட்டி கிடைக்கும். (..............)

14. கடன் பட்டோரினால் நேரடியாக வங்கியில் வைப்பு செய்த பணம் என்பது கடன் பட்டோரின் மீதியாகும் (..............)

15. காசோலையின் முன்பக்கத்தில் உள்ள பெறுநரின் பெயரை காசோலையின் பின்புறத்தில் எழுதுவது காசோலை பிற்குறிப்பிடல் எனப்படும். (..............)

16. (1) வணிகம் வெற்றிபெற உதவும் 4 துணைச் சேவைகளை குறிப்பிடுக.

(2) வணிக வங்கி என்றால் என்ன?

(3) வணிக வங்கிகளால் வழங்கப்படும் சேவைகள 2 குறிப்பிடுக.

17. (1) வணிக வங்கியில் பராமரிக்கக்கூடிய 3 வகையான வைப்புகளை குறிப்பிடவும்.

(2) சேமிப்புக் கணக்கை பராமரிக்கும் நபருக்கு கிடைக்கும் நன்மைகள் 3 தருக.

(3) வியாபாரிகள் நடைமுறை கணக்கை வைத்திருப்பதால் கிடைக்கும் நன்மைகள் / பலன்களை 5 தருக.

Commerce and Business Studies Branch

18. கீழே உள்ள அட்டவணையை பூரணப்படுத்துக.

| விடயம் | சேமிப்பு கணக்கு | நிலையான வைப்பு கணக்கு | நடைமுறை கணக்கு |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | குறைந்த வட்டி | …………………… | …………………………… |
| பிணையாக வைத்து கடன் பெறல் | முடியாது | …………………… | …………………………… |

19. (1) காசோலை என்றால் என்ன?

(2) காசோலையுடன் தொடர்புடைய தரப்பினரைக் குறிப்பிடவும்.

(3) காசோலை எழுதும் போது கருத்தில் கொள்ள வேண்டிய 4 விடயங்களைக் குறிப்பிடவும்.

(4) காந்த மை புலத்தில் (Magnet Ink Character Recognition) குறிப்பிட்ட A,B,C,D என்பவற்றை ஒழுங்குமுறையில் தருக.

| | | | |
|---|---|---|---|
| 149450 | 7010 : | 059 : | 0550134 |
| A | B | C | D |

A.: ………………………………………………………………………………..
B.: ………………………………………………………………………………..
C.: ………………………………………………………………………………..
D.: ………………………………………………………………………………..

20. (1) சாதாரண முறை குறுக்கு கோடிடல் மற்றும் சிறப்பு முறை குறுக்கு கோடிடல் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு யாது?

(2) இலத்திரனியல் பணச் சேவைகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள அட்டைகளின் வகைகளைக் குறிப்பிடவும்?

(3) கடனட்டைக்கும் வரவு அட்டைக்கும் இடையிலான வேறுபாடு யாது?

(4) இலத்திரனியல் பணச் சேவையின் இரண்டு நன்மைகள் மற்றும் தீமைகளை எழுதுங்கள்?

## காப்புறுதிச் சேவை

1. உயிர் அல்லது சொத்துக்கான இடர்களை ஒன்றினைத்து ஒரு தரப்பினருக்கு ஏற்படும் சேதம் அல்லது இழப்பை பகிர்தல்………… என்று அழைக்கப்படுகிறது.

1) துணைச் சேவைகள் 2) வங்கி சேவைகள்

Commerce and Business Studies Branch

3) காப்புறுதிச் சேவைகள் 4) தொடர்பாடல் சேவைகள்

2. காப்புறுதி ஒப்பந்தம் தொடர்பான அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்தும் கடமையின் கொள்கை,

1) பங்களிப்பு 2) அதிகபட்ச நம்பிக்கை

3) இழப்பீடு தத்துவம் 4) காப்புறுதி செய்ய தக்க உரிமை

3. காப்புறுதியுடன் தொடர்புடைய இரண்டாவது தரப்பினர்,

1) காப்புறுதி செய்வோர்.

2) காப்புறுதி நிறுவனம்.

3) காப்புறுதி ஒப்பந்தத்துடன் தொடர்புபடாத பிற வெளி தரப்பினர்.

4) மேலே உள்ள அனைத்து பிரிவினர்களும்.

4. சொத்துக் காப்பீட்டின் முக்கியதுவம் **அல்லாதது**,

1) வணிகத்தைத் தொடர நடாத்திச் செல்ல உதவுகிறது.

2) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வியாபாரத்திற்கு உதவுகிறது.

3) சேமிப்பு முறையாகவோ அல்லது முதலீடாகவோ பயன்படுத்தலாம்.

4) வணிகங்களுக்கு நிதி இழப்புகளை ஈடுசெய்ய முடிதல்.

சிரில் கமகேவினால் ரூ5000 0000 பெறுமதியான கட்டிடம் ஒன்றுக்கு வ/ப இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொண்டார். எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் கட்டிடத்தில் ரூ. 200 0000 மதிப்புள்ள ஒரு பகுதி அழிவுற்றது.

5. மேற்கூறிய சம்பவத்திற்கு தீ காப்பீட்டுக் கொள்கையின் கீழ் பெற்றுக்கொள்ள கூடிய இழப்பீடு,

1) ரூ.2 000 000 2) ரூ.3 000 000

3) ரூ.5 000 000 4) ரூ.8 000 000

6. குறித்த தீ சேதத்திற்கான இழப்பீட்டைப் பெறுவதில் பொருந்தக்கூடிய காப்புறுதி தத்துவம்

1) காப்புறுதி செய்யும் உரிமை 2) அதிகபட்ச நம்பிக்கை

3) இழப்பீட்டு தத்துவம் 4) பங்களிப்பு தத்துவம்

**பின்வரும் கூற்றுகள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடுக.**

7. உயிருக்கு அல்லது சொத்துக்கு காப்பீடு செய்வதற்கான சட்டப்பூர்வ காணப்படும் உரிமை. காப்புறுதி செய்யும் உரிமையாகும் (........)

Commerce and Business Studies Branch

8. கடனபட்டோரின் ஆயுளுக்கு கடன் கொடுத்தோரினால் கடனின் அளவு வரை காப்பீடு செய்ய உரிமை உண்டு. (........)

9. ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்யப்பட்டவர் அகால மரணம் அடைந்தால், பரிந்துரைக்கப்பட்டவர்கள் இழப்பீடு பெறலாம். (........)

10. சொத்துக் காப்புறுதியில், குறித்த சொத்து சேதமடைந்தாலும் இல்லாவிட்டாலும் இழப்பீடு வழங்கப்படும். (........)

11. ஆயுள் காப்புறுதி என்பது பாதுகாப்பாகும். (........)

12. இழப்பீட்டு தத்துவம் ஆயுள் காப்பீட்டிற்கும் பொருத்தமானதாகும். (........)

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. காப்புறுதியில் தொடர்புடைய 03 தரப்பினரின் பெயரைக் குறிப்பிடுக.

2. ஆயுள் காப்புறுதி மற்றும் ஆதன காப்புறுதி ஆகியவற்றுக்கு இடையே உள்ள 03 வேறுபாடுகளை எழுதுக.

3. காப்பீட்டில் பொருந்தக்கூடிய காப்புறுதி தத்துவங்களை பெயரிடுக.

4. சுபுன் காரியவசம், செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து 8,000,000 ரூபா பெறுமதியான ஆயுள் காப்புறுதியைப் பெற்றுள்ளார்.

i.. சுபுனின் உயிருக்கு காப்பீடு செய்வதற்காக சுபுனிடம் காணப்படுகின்ற சட்டப்பூர்வ உரிமையின் பின்னணியில் உள்ள கொள்கை என்ன?

ii மேலே உள்ள காப்பீட்டிற்குப் பொருந்தும் முதலாம் மற்றும் இரண்டாம் தரப்பினரை குறிப்பிடுக..

iii சுபுன் காப்புறுதி காலத்திற்குள் இறந்துவிட்டால் சார்ந்திருப்பவர்களுக்கு இழப்பீடு கிடைக்குமா என்று உம்மிடம் வினாவுகின்றார். விளக்குக.

iv. அவர் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளும் போது, அவர் தனது இதய நோய் நிலையைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவர் மாரடைப்பால் இறந்தார். இருப்பினும் இழப்பீடு வழங்கப்படவில்லை. காப்பீட்டுக் கொள்கையின் அடிப்படையில் காரணத்தை விளக்குங்கள்.

## <u>தொடர்பாடல் சேவை</u>

1. யாதேனும் ஊடகம் மூலம் பல்வேறு தரப்பினரிடையே இடம்பெறும் செய்தித் தகவல் மற்றும் கருத்துக்களின் பரிமாற்றம் ............... எனப்படும்.

1) போக்குவரத்து சேவைகள் 2) வங்கி சேவைகள்

3) தொடர்பாடல் சேவைகள் 4) காப்பீட்டு சேவைகள்

**பின்வரும் ஊடகங்களில் கவனம் செலுத்தி, 2 - 5 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்**

A. மின்னஞ்சல் B. பணியாளர் கூட்டம்

C. விளம்பர பலகைகள் D. பெல்

Commerce and Business Studies Branch

2. வாய்மொழி மற்றும் இலத்திரனியல் முறைகள் இரண்டையும் உள்ளடக்கிய வகை,

1) A மற்றும் C   2) B மற்றும் A

3) A மற்றும் D   4) B மற்றும் C

3. ஒரு வணிகத்தில் காணப்படும் உள்ளக எழுத்துத் மூலமான தொடர்பாடல் முறை,

1) A   2) B   3) C   4) D

4. உள்ளக மற்றும் வெளிப்புற தொடர்புகளுக்கு பயன்படுத்தக்கூடிய தொடர்பு ஊடகம்,

1) A   2) B   3) C   4) D

5. சைகைகளையும் குறியீடுகளையும் பயன்படுத்தும் தொடர்பாடல் முறை.

1) A மற்றும் B   2) B மற்றும் C

3) C மற்றும்   4) D மட்டும்

**பின்வரும் கூற்றுகள் சரியாக இருந்தால் (√),தவறாக இருந்தால் (X) பயன்படுத்தவும்**

6. அனுப்புநர் கொடுத்த செய்தியை அனுப்புபவர் அதே வழியில் புரிந்து கொண்டாரா என்பதை பின்னூட்டல் மூலம். அறிந்துக்கொள்ளலாம். (.......)

7. இலத்திரனியல் மற்றும் எழுத்து மூலமான ஊடகங்களைப் பயன்படுத்தும் ஒரு வகையான தகவல்தொடர்பு மின்னஞ்சல் ஆகும். (.......)

8. தொடர்பாடல் செயல்பாட்டில், செய்தியை அனுப்புபவர் அனுப்புபவர் என்றும் செய்தியை பெறுபவர் தசவல் பெறுனர் என்றும் அழைக்கப்படுவர். (.......)

9. ஒரு தகவல்தொடர்பு ஊடகத்தைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான காரணி பயன்பாட்டின் எளிமை ஆகும். (.......)

**பின்வரும் கேள்விகளுக்கு விடை அளிக்கவும்**.

10. பொருத்தமான தகவல் தொடர்பாடல் முறையொன்றை தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய மூன்று விடயங்களை குறிப்பிடுக.

11. வ/ப நாரதா நிறுவனத்தின் முகாமையாளரான சுனேத் ஒழுங்குபடுத்தல் பிரிவின் ஊழியர்களை வரவழைத்து, அடுத்த மாதம் நிறுவனத்தின் வணிகக் நடவடிக்கைகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்தை நடத்தினார். இதற்கிடையில், மூலப்பொருட்களின் பற்றாக்குறை குறித்த அறிவிப்பை வழங்க, மூலப்பொருட்கள் வழங்குநரான யுனைடெட் நிறுவனத்தின் முகாமையாளர் தோலைபேசி மூலமான அழைப்பு ஏற்படுத்தினார். இந்த முறை மூலப்பொருளை வேறு நிறுவனத்திடம் பெறறுக்கொள்ள உள்ளதாக சுனேத் அந்த நிறுவனத்தின் முகாமையாளரிடம் கூறினார். இது குறித்து ஊழியர்களிடம் தெரிவித்த போது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாக ஊழியர்கள் கருத்து தெரிவித்தனர்.

Commerce and Business Studies Branch

I. மேற்கூறிய சம்பவத்துடன் தொடர்புடைய உள்ளக தொடர்பாடல் முறையொன்றை தருக.

II. மேற்கூறிய சம்பவத்துடன் தொடர்புடைய வெளிப்புறத் தொடர்பாடல் முறையொன்றை காணப்பட்ட சந்தர்ப்பத்தை தருக.

III. தொடர்பாடல் செயல்முறை கூறுகளின் அடிப்படையில் மேற்கண்ட சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்தொடர்பு செயல்முறையை விளக்கவும்.

## <u>போக்குவரத்துச் சேவை</u>

1. போக்குவரத்து என்பது,

    1) பொருட்களின் விநியோகம்.

    2) பொருட்களையும் பயணிகளையும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வது.

    3) ஒரு பொருளுக்கு ஒரு பொருளின் பரிமாற்றம்.

    4) ஒரு ஊடகத்தை இயக்க பயன்படும் சக்தியாகும்

2. ”நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளை புதிதாக அமைக்கவும், தொலைதூரப் பகுதிகளுக்கு இ.போ.ச மூலம் நவீனமயமாக்கப்பட்ட பேருந்துகளை வழங்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.”

மேலே உள்ள சம்பவத்தில் காணப்படும் போக்குவரத்து கூறுகள்,

    1) வழி, ஊடகம்    2) சக்தி, தரிப்பிடம்

    3) வழி , தரிப்பிடம்    4) ஊடகம், சக்தி

3. போக்குவரத்து மூலம் ஒரு நேரத்தில் கொண்டு செல்லக்கூடிய பொருட்களின் அளவு அழைக்கப்படுகிறது,

    1) ஒரு வழியாக.    2) சக்தியாக.

    3) முன்னெச்சரிக்கையாக.    4) திறன்.

4. நெடுஞ்சாலை போக்குவரத்து ஒரு நன்மை.

    1) ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பொருட்களையும் பயணிகளையும் கொண்டு செல்ல முடிதல்.

    2) பயண இலக்கு வரை பயன்படுத்த முடிதல்.

    3) ஒரு குறிப்பிட்ட அட்டவணையின்படி இயங்குதல்.

    4) போக்குவரத்து நெரிசல் இன்மை.

Commerce and Business Studies Branch

5. விமானப் போக்குவரத்தின் தீமையாக அமைவது

1) அதிக வேகம் 2) பயணிகளின் அதிக வசதியைப் பெறல்

3) அதிகரித்த போக்குவரத்து செலவுகள். 4) இலக்கை அடையும் பயணிக்க முடிதல்.

6. கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய எடுக்கப்பட்ட முடிவால், உலகின் மிகப்பெரிய கப்பல்களுக்கு கூட இலங்கை துறைமுகத்திற்கு வருகை தர முடியுமாக அமைந்தது. இங்கு காணப்படும் போக்குவரத்து கூறுகள்,

1) ஊடகம், சக்தி 2) ஊடகம், தரிப்பிடம்

3) சக்தி, தரிப்பிடம் 4) வழி, சக்தி

**பின்வரும் கூற்றுகள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடவும்.**

7. உலகப் பொருளாதார நெருக்கடியில மத்தியில் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்ந்தது. இங்கு குறிப்பிடப்படும் போக்கவரத்தின் மூலக்கூறு சக்தியாகும். (..............)

8. அவசர தேவைக்காக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லக்கூடிய செலவு குறைந்த போக்குவரத்து முறை விமான போக்குவரத்து ஆகும். (..............)

9. நீர்வழிப் போக்குவரத்தின் தீமைகளாக போக்குவரத்துக்கு அதிக நேரம் எடுத்தல் மற்றும் எல்லா இடங்களுக்கும் பயன்படுத்த முடியாமை என்பன அமையும் (..............)

10. போக்குவரத்து ஊடகத்தைக் கையாளப் பயன்படும் இடம் வழியாகும். (..............)

11. "ஒரு துணைச் சேவையாக வணிகத்தை சிறப்பாக கொண்டு நடத்துவதில் போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது."

I. வணிகத்தின் திறமையான செயல்பாட்டிற்கு போக்குவரத்து பங்களிக்கும் 3 வழிகளை குறிப்பிடுக.

II. பொருத்தமான போக்குவரத்து முறையைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய 3 காரணிகளை தருக.

III. நெடுஞ்சாலை போக்குவரத்தை விட புகையிரத போக்குவரத்தின் இரண்டு நன்மைகளை குறிப்பிடுக..

IV. விமான போக்குவரத்துடன் ஒப்பிடும்போது நீர் போக்குவரத்தின் 2 நன்மைகளை குறிப்பிடுக.

12.

I. போக்குவரத்து துறையில் இன்று காணப்படுகின்ற புதிய போக்குகள் எவை?

II. இலங்கையில் வீதி நெரிசலைக் குறைக்க அண்மைக் காலமாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை எவை?

Commerce and Business Studies Branch